දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/02-08/05/202

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2024.03.

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 01/2024

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,

<u>எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்களின் போது விளம்பரப்படுத்தப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பிற்கான தெரிவினை மேற்கொள்ளப் பின்பற்ற வேண்டிய நடைமுறை</u>

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் 92 பிரகாரம் ஆட்சேர்ப்பிற்கான தெரிவு செய்யும் நடவடிக்கையின் போது சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கையளிக்கப்பட்ட நியமிப்புச் செய்யும் தத்துவங்களைக் கொண்டுள்ள ஏற்புடைய அதிகாரி அது குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அறிவுறுத்துரைகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2. எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பின் போது மேற்குறித்த நிலைமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேலதிகத் தெரிவினை மேற்கொள்ளக் கூடியவாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கையளிக்கப்பட்ட நியமிப்புச் செய்யும் தத்துவங்களைக் கொண்டுள்ள அதிகாரிகள் அத்தகைய ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல்களில் பின்வரும் பிரிவை உள்ளடக்குதல் வேண்டும்.

“திறமை ஒழுங்கிற்கமைய வெற்றிடங்களை நிரப்புகையில் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படுகையில் மற்றும் அவ் வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய சேவையின் தேவைப்பாடும் தற்போது காணப்படுமாயின் அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகள் மத்தியிலிருந்து மேலதிகத் தெரிவுகளை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கலாம். இந்தத் தெரிவு செய்யும் நடைமுறையானது பின்வரும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

I. பரீட்சார்த்திகளின் திறனை மதிப்பீடு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை
II. திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

எழுத்துமூலப் பரீட்சையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

இந்தத் தெரிவு செய்யும் நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் www.psc.gov.lk இன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் பின்வரும் இணையப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**முகப்பு → பதிவிறக்கங்கள் → நடைமுறைகள் → விசேட தெரிவு செய்யும் நடைமுறை"**

3. எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும், அரசாங்க சேவை ஆணைக்குழு நியமிப்புச் செய்யும் அதிகாரியாக செயற்படும் சேவைÆசேவை வகுதிகள்Æபதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலை வரைவு செய்கையிலும் ஏற்புடைய நிருவாக அதிகாரிகள் மேற்குறித்த பிரிவை அந்த அறிவித்தல்களில் உள்ளடக்குதல் வேண்டும்.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு